1982 மார்ச் 16]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே சமாதி மாத்திரம் இருந்து வழிபடுகின்ற இடங்களாக இருக்கின்ற ஆலயங்களைப் பொறுத்த வரையில் பிரச்சினை இல்லை. சமாதியாக முதலிலே துவங்கி, பிறகு அதற்குப் பக்கத்திலே ஒரு ஆலயம் எழுப்பப்பட்டு, அந்த ஆயலத்திற்குப் பொதுமக்கள் வருகிற சூழ்நிலை ஏற்பட்டு, அதற்குப் பொது மக்கள் காணிக்கைகள் மற்றும் பணங்கள் தருகிற நிலைமை ஏற்படுகிறபோது, சமாதியும் ஆலயமும் இணைந்து விடுகின்றது. ஆகவே ஆலயம் என்கிறபோது அது பொதுமக்களுடைய ஆலயமாக மாற்றப்படுகிற அந்த பிரச்சினைக்கு தீர்வு கண்டு விட்டால் சமாதி பக்கம் அதிகாரிகள் வரவே மாட்டார்கள். அது பல இடங்களில் இருக்கின்றது. இன்னும் தெளிவாக அதிகாரிகளுக்கு ஆணையிட்டிருக்கிறோம் அறிவுறுத்தியிருக்கிறோம். தனிப்பட்டவர்கள் அவர்களாகவே உருவாக்கி, மிகச் சிறந்த நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டிருக்குமானால், அதற்குப் பொதுமக்கள் தரும் பணத்தையும் ஒழுங்காக கணக்கிட்டு சிறப்பாக நடத்தப்படுமானால் அந்தப் பக்கம் நீங்கள் போக வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் பரம்பரை என்ற பெயரை வைத்துக் கொண்டு, சமாதி என்ற பெயரை வைத்துக் கொண்டு, அதற்குப் பக்கத்திலே ஒரு ஆலயத்தையும் வைத்துக் கொண்டு, அதன் மூலம் இலட்சக் கணக்கான பணத்தை அவர்கள் பெறும்போதுதான் பல பிரச்னைகள் வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆலயத்தைப்பற்றிய விவரமும் அரசுக்குத் தெரியும். இருந்தாலும் சமாதி மட்டும் இருந்து வழிபடும் முறை இருந்தால் அதற்குள் அதிகாரிகள் நுழைய மாட்டார்கள் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரைப்பட நிதி உதவிக் கழகம்.

* வினா எண். 482—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரைப்பட நிதி உதவிக் கழகத்தை தமிழக அரசு அமைக்க உத்தேசித்துள்ளதா ?

(ஆ) அம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அவையின் மூன் அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@1102-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்தத் திரைப்பட நிதி உதவிக் கழகம் எந்த அடிப்படையில் பங்குத் தொகை சேர்க்க இருக்கிறது ? எப்போது முதல் இந்தத் திரைப் பட நிதி உதவிக் கழகம் செயல்படத் தொடங்கும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இப்போது இருக்கிற திட்டத்தின்படி முழுவதும் அரசே பொறுப் பேற்றுக் கொண்டு நடத்துகிற கழகமாகத்தான் இருக்கிறது. இதற்கான தொடக்க வேலைகள்—இப்போது கம்பெனியைப் பதிவு செய்கிற பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. அவை முடிந்த பிறகு இது பற்றிய முழு விவரத்தையும் அறிவிக்க இயலும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த நிதி உதவிக் கழகத்தின் சார்பில் என்ன அடிப்படையில் ஒவ்வொரு படத்திற்கும் எவ்வளவு தொகை வழங்க அரசு உத்தேசித்திருக் கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர வர்களே, இந்த நிதி உதவிக் கழகம் தோற்றுவிக்கப் பட்டதன் அடிப்படை நோக்கம் நல்ல திறமைகள் இருந்தும் பண வசதி இல்லாத காரணத்தாலே கடன் பட்டு படம் எடுக்க முடியாத திறமையான கலைஞர்கள், திறமையான வர்கள் முன்னுக்கு வர வேண்டும். அதன் மூலம் சமுதாயம் பயனடைய வேண்டும் என்ற அடிப்படையில் இந்த நிதி உதவிக் கழகம் தொடங்கப்பட்டிருக்கிறது. இது எப்படி செயல்பட வேண்டும் ; எப்படிப்பட்ட நிபந்தனைகளின் கீழ், விதிகளின்கீழ் கடன்கள் வழங்கப்பட வேண்டும் என்பதெல்லாம் இந்தக் கம்பெனி ரெஜிஸ்டர் செய்யப்பட்டு நடைமுறையில் வரும்போதுதான் விதிகள் உருவாக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சினிமா தயாரிப்பாளர்கள் இடத்திலே போதுமான பணம் இல்லாத காரணத்தால் படத்தை பாதியிலும், அரைகுறையாகவும் நிறுத்தி விடுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அப்பொழுது அவர்கள் நிதி உதவி கோரி நிதி உதவி நிறுவனங்களிடம் சென்றாலும் அங்கே இருக்கிற ஒரு நடிகை தன்னை அந்தப் படத்தில் கதாநாயகியாகப் போட்டால்தான் நிதி உதவி தருவோம் என்று சொல்கிறார்கள்.

''''''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு அனுமதி இல்லை. அடுத்து வினா எண். 483.